**முதன்மை உதவி அமர்வு நீதிமன்றம், திருப்பூர்**

முன்னிலை : திருமதி.V. ஸ்ரீ வித்யா , எம்.எல்.,
முதன்மை உதவி அமர்வு நீதிபதி, திருப்பூர்

(2026–ம் ஆண்டு மார்ச் மாதம் 12–ம் நாள் வியாழக்கிழமை)

(2057– திருவள்ளுவராண்டு – விசுவாவசு ஆண்டு – மாசி திங்கள் 28–ம் நாள்)

**அமர்வு வழக்கு எண்.84/2024**
(**TNTI04–000723–2024**)

**Cr.No.732/2023, Nallur Police Station**

**(P.R.C.No.18/2024, Judicial Magistrate No.IV, Court, Tiruppur)**

| | | |
|---|---|---|
| குற்றமுறையீட்டாளர் | : | அரசுக்காக<br>காவல் ஆய்வாளர்,<br>நல்லூர் காவல் நிலையம்,<br>திருப்பூர். |
| குற்ற எண் | : | 732/2023 |
| எதிரிகளின் பெயர்கள் | : | 1) செல்வம் (20/2003)<br>த/பெ. முத்துபாண்டி<br>**2) ஆண்டிசெல்வம் (19/2004)<br>த/பெ. கணேசன் ( தனியாக பிரித்தெடுக்கப்பட்ட அமர்வு வழக்கு எண். 274/2025 வழக்கின் எதிரி)**<br>3) சுதந்திரராஜன், (23/2000)<br>த/பெ. அர்ஜூனன் |
| எதிரிகள் மீதான குற்றச்சாட்டுக்கள் | : | 1ம் எதிரியின் மீது இந்திய தண்டனைச் சட்டம் பிரிவுகள் 294(பி)இ 326 மற்றும் 307–ன் கீழும், 3ம் எதிரியின் மீது இ.த.ச. பிரிவு 307 உ/இ. 109 ன் கீழும் குற்றச்சாட்டுகள் வனையப்பட்டுள்ளது. |

| | | |
|---|---|---|
| எதிரிகளின் உரை | : | எதிரிகள் தாங்கள் குற்றவாளிகள் இல்லை என தெரிவித்தார்கள். |
| நீதிமன்ற முடிவு | : | இறுதியில், அரசு தரப்பில் எதிரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு இடமில்லாத வகையில் நீருபிக்கவில்லை என்றே இந்த நீதிமன்றம் முடிவு செய்துள்ளதால், சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு வழங்கி, 1ம் எதிரி மீது இதச பிரிவு 294(பி), 326, 307 ன் கீழும் மற்றும் 3ம் எதிரி மீது இ.த.ச. பிரிவு 307 உ/இ. 109 ன் கீழும் வனையப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளிலிருந்து குவிமுச 235(1)ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. சான்று பொருட்கள் குறித்த உத்தரவு இவ்வழக்கிலிருந்து தனியே பிரித்தெடுக்கப்பட்ட அமர்வு வழக்கு எண். 274/2025 வழக்கில் பிறப்பிக்கப்படும். |
| எதிரிகள் சிறையிலிருந்த காலம் | : | 1ம் எதிரி 03.09.2023 முதல் 05.12.2023<br>3ம் எதிரி 03.09.2023 முதல் 25.11.2023 |
| இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாள் | : | 24.05.2024 |
| கு.வி.முச பிரிவுகள் 228,240,246 மற்றும் 251 ன் கீழ் எதிரிகள் விசாரிக்கப்பட்ட நாள் | : | 04.11.2025 |
| எதிரிகள் தரப்பில் தாக்கல் | : | – |

செய்யப்பட்ட மனுக்கள் மற்றும் அதன் முடிவு

சாட்சிகள் முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட தேதிகள் :

| சாட்சிகள் | முதல் விசாரணை | குறுக்கு விசாரணை |
|---|---|---|
| PW.1 | 26.02.2026 | 26.02.2026 |
| PW.2 | 09.03.2026 | 09.03.2026 |

பிரிவு 313ன் கீழ் எதிரிகள் விசாரணை செய்யப்பட்ட தேதி : 12.03.2026

எதிரிகள் நீதிமன்றத்தில் முன்னிலையாகாமல் தலைமறைவாக இருந்திருப்பின் அதன் விபரம் : –

நீதிமன்றங்களில் தடை உத்தரவு ஏதேனும் தாக்கல் செய்யப்பட்டதா, தாக்கல் செய்யப்பட்டிருந்தால் அதன் முடிவு : –

இந்த அமர்வு வழக்கானது இந்நீதிமன்றத்தில் இன்று இறுதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, அரசு தரப்பில் அரசு குற்றவியல் வழக்கறிஞர் திரு. பஷீர் அகமது அவர்களும், எதிரி தரப்பில் வழக்கறிஞர் திருமதி.சங்கீதா அவர்கள் முன்னிலையாகியும், இது நாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்த வழக்கு கோப்பு ஆவணங்கள் அனைத்தையும் கவனமாக பரிசீலனை செய்து இருதரப்பு வாதங்களையும் கேட்டு இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.....

## தீர்ப்புரை

1. இவ்வழக்கின் புகார்தாரர் மற்றும் கொலை முயற்சிக்கு ஆளாகி காயம்பட்ட உறரிகிருஷ்ணன் என்பவர் திருப்பூர் முத்தணம்பாளையம் / கோவில்வழி செல்லும் ரோடு, ஐயப்பா நகரில் நாகராஜன் என்பவர் நடத்தி வரும் ஆர்.கே.எம். நிட்டிங்ஸ் என்ற

கம்பெனியில் மிஷின் ஆப்பரேட்டராக வேலை செய்து வருகிறார். அதே கம்பெனியில் A1 செல்வம், 20/2023, த/ பெ. முத்துப்பாண்டி, A2 ஆண்டிச்செல்வம், 19/2023, த/பெ. கணேசன் மற்றும் A3 சுதந்திரராஜன் 23/2023, த/பெ அர்ஜுனன் ஆகிய மூவரும் மிஷின் ஆபரேட்டராக வேலை செய்து வருகிறார்கள். எதிரிகள் மூவரும் சிவகங்கை மாவட்டத்தைச் சேர்த்தவர்கள் மற்றும் நெருங்கிய நண்பர்கள் ஆவார்கள்.

இச்சம்பவத்திற்கு 1–1/2 மாதத்திற்கு மூன்பு A1 செல்வம் எண்பர் உறரிகிருஷ்ணனை டோரி என்ற பட்டப்பெயரை வைத்து அழைத்துள்ளார். அதனால் இருவருக்கும் வாக்குவாதம் ஏற்பட வாதி உறரிகிருஷ்ணன் கத்திரிக் கோலால் எதிரி ஏ 1 செல்வத்தின் இடது பக்க தலை மற்றும் இடது முதுகில் கீறி விட்டுள்ளார். இந்த விவகாரத்தை கம்பெனியின் ஓனர் நாகராஜன் என்பவர் பேசி இருவரையும் சமாதானம் செய்து வைத்துள்ளார். இருந்தாலும் சமாதானம் ஆகாமல் எதிரி ஏ 1 செல்வம் என்பவர் தனக்கு ஏற்பட்ட அவமானத்தை போக்க வாதி உறரிகிருஷ்ணன் என்பவரை கொலை செய்ய வேண்டுமென்று முடிவு செய்துள்ளார். அதன் தொடர்ச்சியாக முதலாம் எதிரி செல்வம் என்பவர் அவருடைய நண்பர்களான எதிரிகள் ஏ 2 ஆண்டி செல்வம் மற்றும் ஏ 3 சுதந்திரராஜன் ஆகியோருடன் சேர்ந்து உறரிகிருஷ்ணன் என்பவர் மீதுள்ள முன்பகை காரணமாக அவரை கொலை செய்ய சதித்திட்டம் போட்டுள்ளார்கள். அதன்படி, எதிரி ஏ 3 சுதந்திரராஜன் என்பவர் கொலை திட்டத்திற்கு தெரிந்தே உதவும் வகையில் அதற்காக திருப்பாச்சேத்தி சென்று சுமார் 61 செ. மீ நீளமுள்ள வாள் ஒன்றை வாங்கி வந்து முதலாம் எதிரியிடம் கொடுத்துள்ளார். அதன் தொடர்ச்சியாக கடந்த 03.09.2023 ஆம் தேதி நள்ளிரவு 12.35 மணிக்கு இவ்வழக்கின் வாதி உறரிகிருஷ்ணன் என்பவர் ஆர்.கே.எம். நிட்டிங்ஸ் கம்பெனியில் இரவு பணியிலிருந்த போது, எதிரிகள் மூவரும் அவரை கொலை செய்ய வேண்டுமென்ற பொதுவான உட்கருத்துடன் எதிரி ஏ 1 செல்வம், எதிரி ஏ 3 சுதந்திரராஜன் வாங்கி வந்து கொடுத்த வாளை மறைத்து வைத்துக் கொண்டு, மூவரும் ஆட்கள் வேலை செய்யும் பொது இடமான கம்பெனிக்கு சென்றுள்ளார்கள். 3 ஆம் எதிரி சுதந்திரராஜன் கம்பெனி நுழைவு வாயிலின் அருகிலுள்ள மிஷினுக்கு அருகில் மறைந்து நின்றுகொள்ள, மற்ற

எதிரிகள் இருவரும் உள்ளே சென்றுள்ளார்கள். அதன் தொடர்ச்சியாக, 2ம் எதிரி ஆண்டி செல்வம் வாதி உறரிகிருஷ்ணனிடம் சென்று டேய் தேவிடியா மகனே என் பிரெண்ட் செல்வாவை அடிக்குற அளவுக்கு நீ என்ன பெரி ஆளாடர தாயோழி என்று ஆபாசமான வார்த்தைகளால் திட்டியுள்ளார். அதற்கு உறரிகிருஷ்ணன் இந்தப் பிரச்சினையைத் தான் அப்போதே பேசி முடிச்சாச்சில்ல இப்ப ஏன் மீண்டும் பிரச்சினைய வளர்க்கற என்று கேட்டுக் கொண்டிருந்த போதே, அவருக்கு பின்னால் நின்று கொண்டிருந்த முதலாம் எதிரி செல்வம் அவர் மறைத்து வைத்திருந்த வாளை எடுத்து என்னயவே அடிப்பியாடா தாயோழி செத்துத் தொலைடர என்று சொல்லி உறரிகிருஷ்ணனின் வலது பக்க முதுகில் ஓங்கி வெட்டியுள்ளார். அங்கிருந்து உறரிகிருஷ்ணன் ஓட முயன்றபோது, 2ம் எதிரி ஆண்டி செல்வம் அவரை போக விடாமல் கீழே தள்ளிவிட்டுள்ளார். மேற்படி உறரிகிருஷ்ணன் கீழே விழுந்ததும், 2ம் எதிரி கையால் உறரிகிருஷ்ணன் முகத்திலும் வெட்டியுள்ளார். அதன் தொடர்ச்சியாக, முதலாம் எதிரி செல்வம் அவர் வைத்திருந்த வாளால் உறரிகிருஷ்ணனின் இடது குதிங்கால், இடது கை பெருவிரல், இடது கை மணிக்கட்டுக்கு அருகில் ஆகிய இடங்களில் மாறி மாறி வெட்டிக் கொலை செய்ய முயன்றுள்ளார். அப்பொழுது அருகிலிருந்த சாட்சிகள் பூமிநாதன் மற்றும் தனபால் ஆகியோர் வரவும் இன்னைக்கு நீ தப்பிச்சிட்டடர என்னைக்கிருந்தாலும் எங்க கையால தான் உனக்கு சாவு என்று கொலை மிரட்டல் விடுத்து விட்டு அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளார்கள். மேலும் முதலாம் எதிரி வாளால் வெட்டியதில் வெட்டுக் காயங்கள் ஏற்பட்டு மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற வாதி உறரிகிருஷ்ணனுக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் அவருக்கு எற்பட்ட காயம் கொடுங்காயம் என்று காயச்சான்று வழங்கியுள்ளார். எனவே, முதலாம் எதிரி செல்வம் என்பவரின் செய்கையானது சட்டப்பிரிவு 294(b), 324, 326, 307, 506(ii) இ.த.ச.வின் கீழும், 2.ஆம் எதிரி ஆண்டிச்செல்வம் என்பவரின் செய்கையானது சட்டப்பிரிவு 307 உ/இ. 34, 326 உ/இ. 34, 324 உ /இ. 34 மற்றும் 294(b), 341, 323, 506(ii) இ.த.ச–யின் கீழும், 3 ஆம் எதிரி சுதந்திரராஜன் என்பவரின் செய்கையானது சட்டப்பிரிவு 307 உ/இ. 109, 326 உ/இ. 109, 324 உ/இ. 109 இ.த.ச.வின் கீழும்

தண்டிக்கதக்க குற்றங்கள் என்று நல்லூர் காவல் நிலைய ஆய்வாளர் குற்றப்பத்திக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. இவ்வழக்கில் நல்லூர் காவல் நிலைய, காவல் ஆய்வாளர் அவர்களால் தாக்கல் செய்யப்பட்ட குற்ற பத்திரிக்கையை திருப்பூர், குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.4 நீதிமன்றம் திருப்பூர், அவர்களால் கோப்புக்கு எடுக்கப்பட்டு, முதல்நிலை பதிவேட்டு வழக்கு எண்.18/2024 ஆக எண்ணிடப்பட்டு, அதன்பிறகு எதிரிகளுக்கு ஆவணங்களின் நகல்கள் கு.வி.மு.ச.207 பிரிவின் கீழ் இலவசமாக வழங்கப்பட்டுள்ளன. எதிரிகள் மீது தாக்கல் செய்யப்பட்டுள்ள குற்றப்பத்திரிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள குற்றம் ஒருவரை கொலை செய்ய முயற்சி என்று குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.4 தீர்மானித்து எதிரிகள் மீது 307 IPC பிரிவின் கீழ் விசாரிக்கத்தக்க குற்றமாக இருப்பதாக தீர்மானித்து அமர்வு நீதிமன்றத்தால் விசாரிக்கப்படக்கூடியதாக இருக்கின்ற காரணத்தினால் நீதித்துறை நடுவர் எண்.4 திருப்பூர் அவர்களால் மேல் நடவடிக்கைக்காக, இவ்வழக்கினை மாண்புமிகு முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றம், திருப்பூர் அவர்களுக்கு கு.வி.மு.ச பிரிவு 209(அ) –ன் கீழ் சமர்ப்பிக்கப்பட்டதன் அடிப்படையில், மாண்புமிகு முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றம், திருப்பூர் அவர்களுடைய உத்தரவின் அடிப்படையில் வழக்கு கோப்பானது மேல் நடவடிக்கைக்காக இந்நீதிமன்றத்திற்கு வரப்பெற்று, இந்நீதிமன்ற அமர்வு வழக்கு எண்.84/2024 ஆக எண்ணிடப்பட்டு கோப்புக்கு எடுக்கப்பட்டுள்ளது.

3. இவ்வழக்கின், எதிரிகளுக்கு எதிராக குற்றச்சாட்டு வனைவது தொடர்பாக, இருதரப்பு கற்றறிந்த வழக்குரைஞரின் வாதங்கள் கேட்கப்பட்டு, வழக்கு கோப்பு ஆவணங்கள் அனைத்தும், இந்நீதிமன்றத்தால் கவனமாக பரிசீலனை செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கின், எதிரிகள் வழக்கில் கூறியுள்ள குற்றம் புரிந்துள்ளதாக அனுமானிக்க முதற்தோற்ற வழக்கு முகாந்திரம் உள்ளதாக, இந்நீதிமன்றம் கருதியுள்ளதால், இவ்வழக்கின் 1ம் எதிரிக்கு எதிராக, இதச பிரிவு 294(பி), 326, 307ன் கீழும் மற்றும் 3ம் எதிரிக்கு எதிராக இ.த.ச. பிரிவு 307 உ/இ. 109 ன் கீழும் எழுத்துமூலமான குற்றச்சாட்டுகள் இந்நீதிமன்றத்தால் வனையப்பட்டுள்ளது. மேற்படி எதிரிகள்

குற்றச்சாட்டின் தன்மையை புரிந்து கொள்ளும் வகையில், எடுத்து கூறப்பட்டு, கேட்கப்பட்டுள்ள போது, எதிரிகள் தங்கள் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டை மறுத்து, எரிர்வாதம் செய்ய விரும்புவதாக கூறினார்கள்.

4. இவ்வழக்கில் அரசு தரப்பில் மொத்தம் அ.சா.1 மற்றும் அ.சா.2 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.10 வரையிலான சான்றாவணங்கள் மற்றும் அ.சா.பொ.1 முதல் 3 வரையிலான சான்றுபொருட்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

5. <u>அரசு தரப்பு வாய்மொழி சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் சான்று பொருட்கள் வாயிலாக புலனாகும் அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்</u> :–

5.1 இவ்வழக்கில் அ.சா.1 உறரிகிருஷ்ணன் என்பவர் தான் கே.புதூரில் குடியிருந்து கொண்டு பைபர் நெட்வொர்க் வேலை செய்து வருவதாகவும், இதற்கு முன்பு திருப்பூரில் இருந்து கூலிப்பாளையத்தில் நிட்டிங் ஆப்ரேட்டராக வேலை செய்து வந்த்தாகவும், வழக்கு சம்பந்தமாக என்ன தெரியும் என்று கேட்டால் தனக்கும், ஆஜர் எதிரிகளுக்கும் இடையே ஏற்கனவே ஒரு வாய் தகராறு ஏற்பட்டபோது, கம்பெனி ஓனர் இருவரையும் காம்ப்ரமைஸ் செய்து விட்டதாகவும், அதன் பின்பு மூன்று மாதங்கள் கழித்து யாரோ பின்னாடி வந்து தள்ளிவிட்டார் போல் இருந்ததாகவும், அப்போது தான் சந்தேகப்பட்டு ஆஜர் எதிரிகள் மீது புகார் கொடுத்து விட்டதாகவும் சாட்சியமளித்துள்ளார்.

5.2 அ.சா.2 மகாலிங்கம் தனது சாட்சியத்தில் கடந்த 03.09.2023 ஆம் தேதி அன்று அதிகாலை 2 மணியளவில் தான் பணியிலிருந்த போது, திருப்பூர் அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற பெற்று மருத்துவமனை சென்று காயம்பட்ட உறரிகிருஷ்ணன் என்பவரிடமிருந்து புகார் வாக்குமூலத்தை பெற்றதாகவும், பின் நிலையம் வந்து குற்ற எண். 732/ 2023 சட்டப்பிரிவுகள் 294(பி), 341. 323. 324. 307 மற்றும் 506(2) இ.த.ச.ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, திரு.

பாலமுருகன் அவர்கள் வசம் விசாரணைக்காக கோப்பினை வைத்து விட்டதாகவும், அவரின் கையெழுத்து தனக்கு நேரடியாகத் தெரியும் என்பதாலும், அவருடன் புலன்விசாரணை நடத்திய விதத்திலும், புலன் விசாரணை கோப்புகளின் அடிப்படையிலும் சாட்சியமளிப்பதாகவும், 03.09.2023 ஆம் தேதி ஆர்.கே.எம். நிட்டிங் கம்பெனி என்ற சம்பவ இடத்திற்கு சென்று சாட்ச்கள் உறரி கிருஷ்ணன் உடன் வேலை செய்த பாண்டியன், தனபால், பூமிநாதன், கம்பெனி உரிமையாளர் நாகராஜ் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், மேலும் அந்த இடத்தில் ஆறு மணிக்கு முகமது பாரூக் மற்றும் ஐயர் ஆகியோர் முன்னிலையில் வரைபடம் தயார் செய்து பார்வை மகசர் தயாரித்து, அவர்களிடம் கையொப்பம் பெற்றதாகவும். ரகசிய தகவலாளி அளித்த தகவலின் அடிப்படையில் இவ்வழக்கின் எதிரிகளான நீங்கள் கோவில்வழி பாரத் பெட்ரோல் பங்கஅருகில் பஸ்சுக்காக காத்திருப்பதாக தகவல் கிடைத்து, அங்கே சென்று இவ்வழக்கின் எதிரிகளான செல்வம், மற்றும் சுதந்திரராஜன் ஆகிய உங்களையும், அமர்வு வழக்கு எண். 274/2025 வழக்கின் எதிரியான ஆண்டிசெல்வம் என்பவரையும் கைது செய்து நிலையம் கொண்டு வந்து உங்களிடமிருந்து ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், சாட்சிகள் முன்னிலையில் நீங்கள் சொன்ன இடத்திலிருந்து பட்டா கத்தியை கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றியதாகவும், நிலையம் வந்து இவ்வழக்கின் எதிரிகளான உங்களை நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தாகவும், பின் மருத்துவர் சந்திப் என்பவரை விசாரித்து காயச்சான்றிதழ் பெற்றதாகவும், மேல்சிகிச்சை அளித்த மருத்துவர் லோகேஷ் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், 14.03.2024 ஆம் தேதி குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டதாகவும், புகார். முதல் தகவல் அறிக்கை, பார்வை மகசர். மாதிரி வரைபடம். வாக்குமூலம். கைப்பற்றுதல் மகசர். கைப்பற்றுதல் மகசர். விபத்துப் பதிவேட்டு நகல். விபத்து பதிவேட்டு நகல். காயச் சான்றிதழ் ஆகியவை முறையே அ.சா.ஆ.1 முதல் 10 ஆகவும், வாள், ரத்தக்கரை படிந்த சிமெண்ட் தரை மற்றும் ரத்தக்கரை படியாத சிமெண்ட் தரை ஆகியவை முறையே அ.சா.பொ.1 முதல் 3 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும் சாட்சியமளித்துள்ளார்.

6. அரசு தரப்பில் விசாரணை செய்யப்பட்டுள்ள சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களிலிருந்து, இவ்வழக்கின் எதிரிகளுக்கு பாதகமான சங்கதிகளை தொகுத்து கு.வி.மு.ச பிரிவு 313 (1) (ஆ)ன் கீழ் எதிரிகளிடம் வினவிய போது, எதிரிகள் அரசு தரப்பில் கூறியுள்ள சாட்சிகள் பொய்யானவைகள் என்றும், தங்களது தரப்பில் விசாரணை செய்ய சாட்சிகள் இல்லை என்றும் கூறினார்கள், எனவே எதிரிகள் தரப்பு வாய்மொழி சாட்சியம் முடித்துக் கொள்ளப்பட்டது.

7. இவ்வழக்கினை பொறுத்த வரையில் அரசு தரப்பில் 1ம் எதிரிக்கு எதிராக, இதச பிரிவு 294(பி), 326, 307ன் கீழும் மற்றும் 3ம் எதிரிக்கு எதிராக இ.த.ச. பிரிவு 307 உ/இ. 109 ன் கீழும் வனையப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள், இந்நீதிமன்றத்தில் அரசு தரப்பில் தகுநிலை ஐயத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பது குறித்து இந்நீதிமன்றத்தால் முடிவு காண வேண்டிய தீர்வுக்குரிய பிரச்சனையாகும்.

<u>8.பிரச்சினைக்குரிய தீர்வு :–</u>

8.1 இரு தரப்பு வாதங்கள் மற்றும் ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன.

8.2 அரசு தரப்பில் ஆஜரான கற்றறிந்த அரசு கூடுதல் குற்றவியல் வழக்கறிஞர் தனது வாதத்தில் 1ம் எதிரிக்கு எதிராக, இதச பிரிவு 294(பி), 326, 307ன் கீழும் மற்றும் 2ம் எதிரிக்கு எதிராக இ.த.ச. பிரிவு 307 உ/இ. 109 ன் கீழும் குற்றச்சாட்டுகள் வனையப்பட்டு குற்றச்சாட்டை நிரூபிக்க அரசு தரப்பில் அசா.1 மற்றும் அசா.2 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அ.சாஆ.1 முதல் அ.சாஆ.10 வரையான சான்றாவணங்களும், சா.பொ.1 முதல் 3 வரையிலான சான்றுப் பொருட்களும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எனவே, மேற்படி சாட்சிகளின் சாட்சியங்களை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று வாதிட்டு, எதிரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டை அரசுத்தரப்பில் சந்தேகத்திற்கிடமில்லாத வகையில் நிரூபிக்கப்பட்டுள்ளதால், எதிரிகளுக்கு அதிக பட்ச தண்டனை வழங்க வேண்டும் என்று வாதிட்டார்.

8.3 மேற்படி வாதத்தை எதிர்த்து எதிரிகள் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில், இவ்வழக்கில் பாதிக்கப்பட்ட சாட்சி என கூறப்படும் அ.சா.1 உறரிகிருஷ்ணன் அரசு தரப்பு வழக்கை ஆதரித்து சாட்சியமளிக்காததால் அவர் பிறழ் சாட்சியாக பாவிக்கப்பட்டு, அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளதாகவும், அ.சா.1 க்கு ஏற்பட்ட காயம் குறித்து நிரூபிக்கும் வகையில் அவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் எவரும் விசாரிக்கப்படவில்லை என்றும், அ.சா.1 தனக்கு ஏற்பட்ட காயம் குறித்து எந்தவித சாட்சியமும் அளிக்கவில்லை என்றும், அ.சா.1 எதிரிகளை அடையாளம் காண்பித்து சாட்சியம் ஏதும் அளிக்கவில்லை என்றும், காயம் ஏற்படுத்த பயன்படுத்தப்பட்டதாக அரசுத் தரப்பில் கூறப்படும் ஆயுதம் எதையும் அ.சா.1 அடையாளம் காண்பிக்கவில்லை என்றும், எதிரிகள் எந்த ஆயுதங்களால் தன்னை தாக்கினார்கள் என்பது குறித்து அ.சா.1 ன் குறுக்கு விசாரணையில் கூட அவரிடம் கேள்வி ஏதும் அரசுத் தரப்பில் கேட்கப்படவில்லை என்றும், அ.சா.2 ஆக விசாரிக்கப்பட்டுள்ள ஆய்வாளர் வழக்கு விசாரணை விவரங்கள் குறித்து மட்டுமே சாட்சியமளித்துள்ளதாகவும், அவருடைய சாட்சியம் வேறு எந்த சாட்சிகளாலும் ஒத்துரைக்கப்படவில்லை என்றும், எனவே, இந்த வழக்கே சந்தேகத்திற்கிடமான வழக்கு என்றும் எனவே எதிரிகளை மேற்படி குற்றச்சாட்டுகளிலிருந்து விடுதலை செய்யவேண்டும் என்று வாதிட்டார்.

8.4 இந்த நீதிமன்றம் அரசு தரப்பில் முன்னிலை படுத்தியுள்ள வாய்மொழி மற்றும் ஆவண சாட்சிகளையும் இரு தரப்பு வாதங்களையும் ஆராய்கையில் அசா.1 உறரிகிருஷ்ணன் தனது முதல் விசாரனை சாட்சியத்தில், ஆஜர் எதிரிகளுக்கும் இடையே ஏற்கனவே ஒரு வாய் தகராறு ஏற்பட்டபோது, கம்பெனி ஓனர் இருவரையும் காம்ப்ரமைஸ் செய்து விட்டதாகவும், அதன் பின்பு மூன்று மாதங்கள் கழித்து யாரோ பின்னாடி வந்து தள்ளிவிட்டார் போல் இருந்ததாகவும், அப்போது தான் சந்தேகப்பட்டு ஆஜர் எதிரிகள் மீது புகார் கொடுத்து விட்டதாகவும் சாட்சியமளித்துள்ளார். எதிரிகளுக்கு பாதகமான எந்த ஒரு நிகழ்வையும் அசா.1 குறிப்பாக சாட்சியத்தில் கூறவில்லை. மேலும் அ.சா.1 ஆன வாதி உறரிகிருஷ்ணன் சம்பவம் நடந்த விதம்

குறித்தோ, எந்த எதிரி என்ன குற்றச் செயலில் ஈடுபட்டார் என்பது குறித்தோ, எந்த ஆயுதத்தால் தன் உடலின் எந்த பாகத்தில் காயம் ஏற்படுத்தினார்கள் என்பது குறித்தோ, காயங்களின் தன்மை குறித்தோ, எதிரிகளை அடையாளம் காண்பித்தோ எவ்வித சாட்சியமும் அளிக்கவில்லை.

8.5 மேலும் அரசுத் தரப்பில் நிகழ்நிலை புகார்தாரர் மற்றும் புலன் விசாரணை அதிகாரி ஆகியோரை தவிர மற்ற சாட்சிகள் எவரும் விசாரிக்கப்படவில்லை. அ.சா.2 புலன்விசாரணை அதிகாரியின் சாட்சியத்தின் வாயிலாக, அ.சா.1 அளித்த புகார் /அ.சா.ஆ.1 ன்அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை / அ.சா.ஆ.2 பதிவு செய்யப்பட்டது குறித்தும், பார்வை மகசர் / அ.சா.ஆ.3 மற்றும் மாதிரி வரைபடம் / அ.சா.ஆ.4 ஆகியவை தயாரிக்கப்பட்டது குறித்தும், 1 ம் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலம் /அ.சா.ஆ.5 பெறப்பட்டது குறித்தும், அதனடிப்படையில் சா.பொ.1 முதல் 3 வரையிலான சான்றுப் பொருட்கள் சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகசர்/அ.சா.ஆ.6 மற்றம் 7 மூலம் கைப்பற்றப்பட்டது குறித்தும், சாட்சிகளை விசாரித்து அவர்களின் வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டது குறித்தும், விபத்துப் பதிவேட்டு நகல்கள்/ அ.சா.ஆ.8 மற்றும் 9 மற்றும் காயச்சான்றிதழ்/ அ.சா.ஆ.10 பெற்றது குறித்தும், எதிரிகளை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியது குறித்தும், புலன் விசாரணை முடித்து குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது குறித்தும் தெரிய வருகிறது. ஆனால், பார்வை மகசர், ஒப்புதல் வாக்குமூலம், கைப்பற்றுதல் மகசர் ஆகியவற்றில் சாட்சிக் கையொப்பமிட்ட சாட்சிகள் எவரும் அரசுத் தரப்பில் விசாரிக்கப்பட்டு, அ.சா.2 ன் சாட்சியம் ஒத்துரைக்கப்படவில்லை. அதே போல, அ.சா.1 க்கு முதல் மற்றும் மேல் சிகிச்சை அளித்த மருத்துவர்கள் எவரும் விசாரிக்கப்பட்டு, அ.சா.1 க்கு ஏற்பட்டதாக சொல்லப்படும் காயங்கள் சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில், சொன்ன ஆயுதங்களால் ஏற்பட்டது என்றும், காயங்களின் தன்மை குறித்தும் நிரூபிக்கப்படவில்லை. சம்பவத்தை நேரில் பார்த்ததாக எந்த ஒரு சாட்சியும் அரசுத் தரப்பில் விசாரிக்கப்படவில்லை.

8.6. அரசுத்தரப்பில் பாதிக்கப்பட்டதாகக் கூறப்படும் அ.சா.1 உறரிகிருஷ்ணன் அரசுத் தரப்பு வழக்கினை உறுதிப்படுத்தும் வகையில் சாட்சியம் அளிக்கத் தவறியுள்ள நிலையில், அரசுத் தரப்பு வழக்கு வலுவிழந்து விட்டதாகவே கருத இயலும். அ.சா.1 பிறழ் சாட்சியாக மாறிவிட்ட நிலையில், எதிரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டுகளை நிரூபிக்கும் வகையில் வேறு எந்த சாட்சியின் சாட்சியமும் அரசுத் தரப்பில் முன்னிடப்படவில்லை. மேலும், அ.சா.1, 2 ஆகியோரின் குறுக்கு விசாரணையின் மூலமும் அரசுத் தரப்பில் எதிரிகளின் மீதான குற்றச்சாட்டுகளை நிரூபிக்கும் வகையில் எவ்வித முயற்சியும் எடுத்ததாகத் தெரியவில்லை. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் வாதிட்டதைப் போலவே, அ.சா.1 எதிரிகளையோ, அவர்கள் பயன்படுத்தியதாகக் கூறப்படும் ஆயுதங்களையோ இந்நீதிமன்றத்தில் அடையாளம் காண்பிக்கவில்லை. அ.சா.1 ஐ தவிர தனி நபர் சாட்சிகள் எவரையும் அரசுத் தரப்பில் விசாரிக்க முன்வராத நிலையில், புலன் விசாரணை அதிகாரியான அ.சா.2 ன் சாட்சியத்தை மட்டும் வைத்துக் கொண்டு, எதிரிகள் குற்றவாளிகள் என முடிவு செய்ய இயலாது என்றே இந்த நீதிமன்றம் கருதுகிறது. எனவே, ஏற்கனவே இந்த நீதிமன்றம் கலந்துரையாடலில் குறிப்பிட்டுள்ளவாறு அரசுத்தரப்பில் எதிரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டானது சந்தேகத்திற்கு இடமில்லாத வகையில், நிரூபிக்கவில்லை என்றே இந்த நீதிமன்றம் முடிவு செய்கிறது.

8.7 எனவே இறுதியில், அரசு தரப்பில் எதிரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு இடமில்லாத வகையில் நீரூபிக்கவில்லை என்றே இந்த நீதிமன்றம் முடிவு செய்துள்ளதால், சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு வழங்கி, 1ம் எதிரி மீது இதச பிரிவு 294(பி), 326, 307 ன் கீழும் மற்றும் 3ம் எதிரி மீது இ.த.ச. பிரிவு 307 உ/இ. 109 ன் கீழும் வனையப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளிலிருந்து குவிமுச 235(1)ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. சான்று பொருட்கள் குறித்த உத்தரவு இவ்வழக்கிலிருந்து தனியே பிரித்தெடுக்கப்பட்ட அமர்வு வழக்கு எண். 274/2025 வழக்கில் பிறப்பிக்கப்படும்.

இந்த தீர்ப்பானது என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்ட பின்னர், இன்று 2026 ம் ஆண்டு மார்ச் மாதம் 12–ம் நாள் என்னால் அவையறிய பகரப்பட்டது.

Dr.V.Sree Vidya.

Digitally signed by Dr.V.Sree Vidya.
DN: cn=Dr.V.Sree Vidya., ou=Judicial Department, o=Judicial Officer, l=Tiruppur, st=Tamil Nadu, c=+91
Date: 2026.03.12 19:57:36 +0530

**முதன்மை உதவி அமர்வு நீதிபதி,**
**முதன்மை உதவி அமர்வு நீதிமன்றம்**
**திருப்பூர்.**

**<u>அரசு தரப்பு சாட்சிகள் :</u>**

| | | |
|---|---|---|
| அ.சா.1 | 26.02.2026 | உறரிகிருஷ்ணன் / நிகழ்நிலை புகார்தாரர் |
| அ.சா.2 | 09.03.2026 | மகாலிங்கம், ஆய்வாளர், நல்லூர் காவல் நிலையம் |

**<u>அரசு தரப்பு சான்றாவணங்கள்</u>** :

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1/அ.சா.2 | 03.09.2023 | புகார் வாக்குமூலம் |
| அ.சா.ஆ.2/அ.சா.2 | 03.09.2023 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.3/அ.சா.2 | 03.09.2023 | பார்வை மகஜர் |
| அ.சா.ஆ.4/அ.சா.2 | 03.09.2023 | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.5/அ.சா.2 | 03.09.2023 | 1 ம் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலம் |
| அ.சா.ஆ.6/அ.சா.2 | 03.09.2023 | கைப்பற்றுதல் மகசர் (சா.பொ.1 வாள்) |
| அ.சா.ஆ.7/அ.சா.2 | 03.09.2023 | கைப்பற்றுதல் மகசர் (சா.பொ.2 மற்றும் 3) |
| அ.சா.ஆ.8/அ.சா.2 | 03.09.2023 | விபத்துப் பதிவேட்டு நகல் |
| அ.சா.ஆ.9/அ.சா.2 | 04.09.2023 | விபத்துப் பதிவேட்டு நகல் |
| அ.சா.ஆ.10/அ.சா.2 | 22.12.2023 | காயச்சான்றிதழ் |

**<u>அரசு தரப்பு சான்று பொருட்கள்</u>** :

| | |
|---|---|
| சா.பொ.1/அ.சா.2 | வாள் |
| சா.பொ.2/அ.சா.2 | ரத்தக்கரை படிந்த சிமெண்ட் தரை |
| சா.பொ.3/அ.சா.2 | ரத்தக்கரை படியாத சிமெண்ட் தரை |

**<u>எதிரிகள் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள் மற்றும்</u>**

**<u>சான்று பொருள்கள் :</u>** இல்லை

Dr.V.Sree Vidya.

Digitally signed by Dr.V.Sree Vidya.
DN: cn=Dr.V.Sree Vidya., ou=Judicial Department, o=Judicial Officer, l=Tiruppur, st=Tamil Nadu, c=+91
Date: 2026.03.12 19:57:52 +0530

**முதன்மை உதவி அமர்வு நீதிபதி,**
**முதன்மை உதவி அமர்வு நீதிமன்றம்**
**திருப்பூர்.**

வரைவு / நேரிய / நகல் தீர்ப்புரை
அமர்வு வழக்கு எண். 84/2024
நாள் 12/03/2026
மு.சா. நீதிமன்றம், திருப்பூர்